**மதுரை மாவட்டம் கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், சிவரக்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை – திரு.D.செல்வராஜ்**

ந.க.எண்: 21/2024 நாள்:27.04.2024

பொருள்: உத்தேச குடியிருப்பு தொழில்நுட்பு மனைப்பிரிவு சம்மந்தமாக மதுரை மாவட்டம் கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம் -**சிவரக்கோட்டை ஊராட்சி,** சிவரக்கோட்டை கிராமம் சர்வே எண்கள்: 262/4B, 263/3A, 263/3B, 263/4, 263/5A மற்றும் 263/5B ஏக்கர் **6** செண்டு **37** அல்லது **25800.00ச.மீ** பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு தொழில்நுட்ப மனைப்பிரிவு வரைபடம் ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் தொடர்பாக.

பார்வை:- (1) அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 04.05.2017 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.125, பாகம் III பிரிவு 1(A) நாள் 04.05.2017 மற்றும் அரசாணை எண்: 172, நாள்: 13.10.2017.

(2) உறுப்பினர் செயலர் (பொ)மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் திருமதி:மஞ்சு உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை மாவட்டம், செக்டார் 6, ஆனையூர் முடக்கத்தான் பிரதான சாலை, கூடல்நகர், மதுரை – 625017, அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். 23677/2024/SWP/ FGL00LOV/2024/TCP நாள் 20.03.2024

(3) திருமதி.V.ஜெயா செலுத்திய வளர்ச்சிக் கட்டணம் தலைவர் அவர்கள், சிவரக்கோட்டை ஊராட்சி, சிவரக்கோட்டை கிராம வங்கி கணக்கில் **INDIAN OVERSEAS BANK** வரைவோலை எண் **890638626** மூலம் ரூ. **95,560.00/-** (ரூபாய் தொண்ணூற்று ஐந்தாயிரத்து ஐந்நூற்று அறுபது மட்டும்) நாள். 26.04.2024

(4) தொடர்புடைய ஆவணங்கள்

உத்தரவு:

பார்வை 1 ல் காணும் கடிதத்தில், மதுரை உள்ளூர் திட்ட குழும பகுதி, கள்ளிக்குடி வட்டம், கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட சிவரக்கோட்டை ஊராட்சி, சிவரக்கோட்டை கிராமம், சர்வே எண்கள்:262/4B, 263/3A, 263/3B, 263/4, 263/5A மற்றும் 263/5B ஏக்கர் **6** செண்டு **37** அல்லது **25800.00ச.மீ** பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு தொழில்நுட்ப மனைப்பிரிவு வரைபடத்திற்கு மதுரை நகர் ஊரமைப்பு மூலம் (In Principally accepted Layout Frame) ம.வ / மா.ந.ஊ.அ (மதுரை மாவட்டம்) எண். **29/2024** எனவும் எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 49 ன் கீழ் கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1. மனைப்பிரிவில் அமைந்துள்ள குடியிருப்பு மனைகளுக்கான சாலைகள், (மூலை முடக்குகள்) உள்ளாட்சி உபயோகத்திகான இடம், பூங்கா இடம் மற்றும் மின்சார வாரியத்திற்கு இடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனை சிவரக்கோட்டை ஊராட்சி மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் தானமாக பத்திரப்பதிவு மனுதாரரால் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

2. வளர்ச்சிக்கட்டணமாக தலைவர் அவர்களுக்கு சிவரக்கோட்டை ஊராட்சி வங்கி கணக்கில் வரைவோலை மூலமாக செலுத்தப்பட்டது.

நிபந்தனைகள்:

1. (i) மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட ம.வ. /மா.நா.ஊ.வ. (மதுரை மாவட்டம்) எண்: **29/2024** (இணையதள ஒப்புதல்) என எண்ணிடப்பட்டுள்ள வரைப்படத்தின் படி எல்லைக்கற்களால் வரையறுக்க வேண்டும்.

   (ii) உள்ளூர் திட்டக்குழுமம் உறுப்பினர் செயலரால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் உள்ளவாறு மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள் பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் மாவட்ட நகர் ஊரமைப்பு, உதவி இயக்குநர் உறுப்பினர் செயலரின் முன் ஒப்புதலின்றி மாற்றம் செய்தல் கூடாது.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள், அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ, வேறு எந்த விதத்திலும், பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ, கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள், தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடுகட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தபட வேண்டும். பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.

5. சாலையின் இருபுறங்களிலும் 10 அடி தூரத்திற்கு ஒன்றாக மரம் நடப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

6. மதுரை உள்ளூர் திட்டக் குழுமம் உறுப்பினர் செயலர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். 23677/2024/SWP/ FGL00LOV/2024/TCP நாள் 20.03.2024 - ல் தெரிவிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளையும் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். அங்கீகாரம் செய்யப்படும் சாதாரண மனை எண்கள்: 1-65, 101-165, EWS மனை எண்கள் 66-100 ஆக மொத்தம் 165 (நூற்று அறுபத்தைந்து மட்டும்) சிவரக்கோட்டை ஊராட்சி மூலம் அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளது.

வரைபடத்தின் மனைப்பிரிவு ஒதுக்கீடுகள் விபரம்

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு | = 6.37 ஏக்கர் (25800.00 ச.மீ) |
| சாலையின் பரப்பு | |
| மூலை முடக்கு உட்பட | =8260.30 ச.மீ |
| TANGEDCO | = 95.48 ச.மீ (0.54%) |
| LOCAL BODY | = 101.31ச.மீ (0.57%) |
| பூங்கா பரப்பளவு | = 1780.96ச.மீ (10.15%) |
| மனையிட பரப்பு | = 17539.70 ச.மீ |

தலைவர்
சிவரக்கோட்டை ஊராட்சி
சிவரக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்
கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்:-

திருமதி.V.ஜெயா,
கதவு எண்: 14C/1,
N.S. கோனார் தெரு,
ஜெய்ஹிந்துபுரம், மதுரை தெற்கு
மதுரை- 625 011

நகல்:

1. உறுப்பினர் செயலர்(பொ)
   உள்ளூர் திட்டக்குழுமம், மதுரை

2. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
   கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம்.